

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | பிப்ரவரி 10, 2022 | புரட்சி 21 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00


## முற்றுகை; இரயில் மறியல்; ஆர்ப்பாட்டங்கள்

# ஆளுநருக்கு எதிராகக் கழகம் போர்க்கோலம்

***த**மிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட’ நீட் விலக்கு’ மசோதாவை, திருப்பி அனுப்பிய, ஆளுநரைக் கண்டித்தும், ஆளுநரை பதவி விலகக் கோரியும், கழக சார்பில் போராட்டங்கள் நடைபெற்றன.*

**சென்னை :** 04.02.2022 அன்று மாலை 4 மணியளவில் சென்னை சின்னமலை இராஜீவ் காந்தி சிலை அருகில், ஆளுநர் மாளிகை செல்லும் வழியில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் ஆளுநர் மாளிகை முற்றுகை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**விடுதலை இராசேந்திரன் :** ஆர்ப்பாட்டத்தில், கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் செய்தியாளர் களிடத்தில், “நீதிபதி ஏ.கே இராஜன் தலைமையில் தமிழ்நாடு அரசு ஒரு குழுவை நியமித்து அந்தக் குழு நீட் தேர்வு குறித்து, பல மருத்துவர்களை, சமூகவியலாளர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி இந்த தேர்வு கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு எதிரானது என்று பரிந்துரை வழங்கியுள்ளது. ஆனால் ஆளுநர் கூறுகிறார், ‘இந்த நீட் தேர்வை இரத்து செய்தால், ஏழை எளிய மாணவர்களும், கிராமப்புற மாணவர்களும் பாதிக்கப்படுவார்கள்’ என்று கூறுகிறார். தமிழ்நாடு அரசு ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியின் பரிந்துரையில் நிறைவேற்றிய மசோதாவை ஆளுநர் எந்த அடிப்படையில் மறுத்திருக்கிறார்? அந்தப் பரிந்துரையை அவர் படித்தாரா? இவர் ஏற்கெனவே உளவுத் துறையில் பணியாற்றி இருக்கிறார். அப்படி உளவுத் துறையை வைத்து தமிழ்நாடு முழுவதும் மக்களின் கருத்தை கேட்டிருப்பார் போலிருக்கிறது!

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, நாடாளு மன்றத்தில் நீட் தேர்வை எதிர்த்துப் பேசியதோடு தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஒரு போதும் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது. காரணம் தமிழ்நாடு மாநில உரிமை - மொழிப் பற்று - சமூக நீதி சிந்தனைகளால் பக்குவப்பட்டுள்ள மாநிலம் என்று பேசியிருக்கிறார். அதற்கு அடுத்த நாளே ஆளுநர் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டை ஆட்சி செய்வோம் என்று காட்டுவதுபோல் நீட் மசோதாவை திருப்பி அனுப்பியிருக்கிறார்.

ஏற்கெனவே தமிழக அமைச்சரவை இராஜீவ் கொலையில் தண்டிக்கப்பட்ட ஏழு பேருக்கு தண்டனைக் குறைப்பு தீர்மானம் நிறைவேற்றியது. இதற்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநர். ஆனால் ஒப்புதல் தர வேண்டிய ஆளுநர் ஒப்புதல் தராமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கிறார். ஆனால் நீட் தேர்வு பரிந்துரைக்கு ஒப்புதல் தர வேண்டியவர் குடியரசுத் தலைவர். ஆனால் ஆளுநர் தானாகவே முடிவு செய்து நிராகரிக்கிறார். எனவே ஒன்றியத்தை ஆளும் மோடி அரசு எப்படி ஆளுநர் களைப் பயன்படுத்தி மைதானத்தில் பந்துகளை உருட்டி விளையாடுவதை போல ஆளுநர்களை வைத்து தனது சதுரங்க விளையாட்டை விளையாடு கிறது என்பதற்கு இந்த சம்பவம் ஒரு சாட்சி.

தமிழக முதல்வர் கூறியிருக்கிறார், ஆளுநர் கூறிய படி மீண்டும் திருத்தங்களைச் செய்து சட்ட மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப் போகிறோம் என்று கூறியுள்ளார். அப்போது ஆளுநர் என்ன முடிவை எடுக்கப் போகிறார் என்பது தான் இப்போது எழுந்திருக்கிற கேள்வி. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அண்ணா கூறியதை சுட்டிக்காட்டி யிருக்கிறார், “ஆட்டுக்குத் தாடி தேவையில்லை, நாட்டுக்கு கவர்னர் தேவையில்லை” எனவே தமிழ்நாட்டு ஆளுநரின் இந்த நடவடிக்கை காரணமாக கூட்டாட்சி தத்துவத்திற்கு வேட்டு வைக்கப்படுகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தை விட ஆளுநர் மாளிகை அதிகாரமிக்கது என்று மக்களாட்சிக்கு எதிரான கருத்தை நாட்டுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தற்போது நடக்கிற ஆட்சி சமூக நீதிக்கான ஆட்சி, தமிழ்நாடு சமூக நீதி மண், தமிழ்நாடு பெரியார் மண் என்பதை நிரூபிக்கிற வகையில் இந்த போராட்டம் தமிழ்நாடு முழுவதும் தொடரும்” என்று உரையாற்றினார். தொடர்ந்து தமிழ்த் தேச மக்கள் முன்னணியைச் சார்ந்த செந்தில் உரையாற்றினார்.




ஆர்ப்பாட்டத்தில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட துணைச் செயலாளர் மயிலை சுகுமார் உள்பட மாவட்ட பொறுப்பாளர்கள், தோழர்கள் 70 பேர் பங்கேற்றனர்.

**சேலம் :** சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக, 05.02.2022 அன்று மதியம் 2.30 மணியளவில், தமிழக ஆளுநர் ரவியை ஒன்றிய அரசு திரும்பப் பெறக் கோரியும் பதவி விலகக் கோரியும் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்தி மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் ஆகியோர் முன்னிலையிலும் இரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் மதிமுக மத்திய மாவட்ட செயலாளர் ஆனந்தராஜ், தமிழ்தேச மக்கள் முன்னணியைச் சார்ந்த சீனிவாசன், புரட்சிகர இளைஞர் முன்னனியைச் சார்ந்த வின்செண்ட், திராவிடர் பண்பாட்டு நடுவம் பொறுப்பாளர் கி. முல்லை வேந்தன், நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் மு. சாமிநாதன், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் திருப்பூர் சந்தோஷ் உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

பின்னர் இரயில் நிலையத்தை முற்றுகையிட தோழர்கள் தடுப்புகளைத் தள்ளி உள்ளே செல்ல முற்பட்டனர். காவல்துறை தோழர்களைத் தடுத்து கைது செய்து அருகில் உள்ள மண்டபத்தில் வைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் 75க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைது செய்யப் பட்டனர். மாலை 6.00 மணிக்கு விடுவிக்கப்பட்டனர். மண்டபத்திற்குள் அனைத்து இயக்க தோழர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

**கோவை :** கோவை மாவட்ட கழகத் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் ஆளுநரைக் கண்டித்து கோவை ரயில் நிலையத்தில் முற்றுகைப் போராட்டம் 05.02.2022 அன்று மாலை 4 மணியளவில் நடை பெற்றது. முற்றுகையிட முயன்ற திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டனர். இரவு 7 மணி அளவில் விடுவிக்கப் பட்டனர்.

முற்றுகைப் போராட்டத்தில், கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், நிர்மல்குமார், வெங்கட், நேருதாசு, மாதவன் சங்கர், கிருஷ்ணன், புரட்சி தமிழன், விஷ்ணு, ஆனந்த், சபரி, சிவா, கணேசன், முத்து, சரஸ்வதி, சங்கீதா, அய்யப்பன், மாரியப்பன், சிவராஜ், மனோரஞ்சிதம், சுந்தரமூர்த்தி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கைதானார்கள். கைது செய்யப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டனர்.

அந்த மண்டபத்திலேயே சவுரிபாளையம் பகுதியைச் சேர்ந்த டிட்டோ ஸ்டுடியோ சிவராஜ் தன்னை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பாக 05.02.2022 அன்று காலை 10 மணியளவில் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடியில், மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமையில் ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். விடுதலை சிறுத்தைகள் கட்சி மண்டல செயலாளர் வேலு குபேந்திரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், திவிக மயிலாடுதுறை மாவட்டத் தலைவர் மகாலிங்கம், தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, அமைப்பாளர் செந்தில்குமார், தமிழர் உரிமை இயக்கம் சுப்பு. மகேஷ், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் செந்தில், தமிழக மக்கள் முன்னணி விஷ்ணு, திவிக தஞ்சை மாவட்ட பொறுப்பாளர் சோலை. மாரியப்பன், திராவிடர் விடுதலைக் கழகம் சிதம்பரம் ஆசியஜோதி, மனித நேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் சேக் அலாவுதீன், தமுமுக மாவட்ட பொறுப்பாளர் பாசித், பாப்புலர் ப்ரெண்ட் ஆப் இந்தியா மாவட்ட தலைவர் சபீக் அகமது, விசிக, எஸ்.டி.பி.அய், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்), பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா உள்ளிட பல்வேறு கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டம் கடும் வெயிலில் நடந்து கொண்டிருந்த பொழுது ஆர்க்கெஸ்ட்ரா நடத்தி கொண்டு இருக்கும் ராஜமாணிக்கம் என்ற தோழர், போராட்டத்தை வாழ்த்தி அனைவருக்கும் தண்ணீர் பாட்டில்களை வாங்கிக் கொடுத்தார்.

**பேராசிரியர் ஜெயராமன் :** ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுப் பேசிய பேராசிரியர் ஜெயராமன், ‘அகண்ட இந்துராஷ்டிரத்தை உருவாக்கும் நோக்கத்தோடு ஒன்றிய பார்ப்பனிய ஆட்சி மனு தர்மத்தை மீண்டும் சட்டமாக்கத் துடிக்கிறது. இடஒதுக்கீட்டால் படித்து முன்னேறி வரும் ‘சூத்திர’, ‘பஞ்சம’ மக்களைத் தடுத்து மீண்டும் வர்ணாஸ்ரமக் கட்டமைப்புக்குள் கொண்டு போகத் திட்டமிட்டே ‘நீட்’ தேர்வு முறையைத் திணிக்கிறது; சமூகத்தை மீண்டும் புதைக் குழியில் போடுவதே இவர்களின் நோக்கம் என்றார். ‘நீட்’ வந்த பிறகு தமிழ் வழியில் படிப்போர், மருத்துவக் கல்லூரியில் நுழைவது 8 மடங்கு அளவு குறைந்து விட்டது.

2016ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நீட் திணிக்கப் பட்டது ஜெயலலிதா முதல்வராக இருந்த போது தடுத்து நிறுத்தினார். 2017இல் ஓ. பன்னீர் செல்வம் முதல்வராக இருந்தபோது ஒன்றிய ஆட்சி மிரட்ட லுக்கு அடிபணிந்து ‘நீட்’டை அனுமதித்தார். இந்த ஆளுநர் மாற்றப்பட்டு வேறு ஆளுநர் வந்தாலும் இந்த அமைப்பு இருக்கும் வரை இது தான் நடக்கும். எனவே இந்த அமைப்பிலிருந்து நாம் வெளியேற வேண்டும் என்றார், பேராசிரியர் ஜெயராமன். ●

தலையங்கம்

## அன்று ‘சமஸ்கிருதம்’ இன்று ‘நீட்’

‘நீட்’ எனும் வடிகட்டும் நுழைவுத் தேர்வு முறை – மருத்துவப் படிப்பின் தரத்தை உயர்த்தும் என்ற வாதத்தை மறுத்து, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையில் மக்களிடம் சரியான விளக்கங்களை முன் வைத்துள்ளார். ஒரு மாணவர், மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டாலே, அவர் மருத்துவர் ஆக முடியாது. தனது படிப்புக் காலம் முழுதும் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் தான் மருத்துவராக முடியும். இந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டு மருத்துவர்கள் உலகம் புகழும் மருத்துவர்களாக பணியாற்றி வருகிறார்கள். அதே நேரத்தில் நீட் தேர்வு முறை வழியாக மருத்துவக் கல்லூரிகளில் சேர வேண்டுமானால் பயிற்சி மய்யங்களுக்குப் போய் பெரும் பொருட் செலவில் பயிற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு ஆண்டு பயிற்சியில் தேர்ச்சி பெற முடியவில்லை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகாலம் தேவைப்படுகிறது” என்று நீட் உருவாக்கும் சமூகத் தடைகளை சுட்டிக் காட்டியிருக்கிறார், தமிழக முதல்வர்.

இத்தகைய சமூகத் தடைகளைத் தகர்த்துத் தான் பார்ப்பனரல்லாத மாணவர்கள் மருத்துவம் படிக்க முடிந்திருக்கிறது என்பதை கடந்தகால வரலாறுகள் கூறுகின்றன.

கடந்த பிப்.4, 2022, ‘இந்து’ ஆங்கில நாளேடு, தமிழ்நாடு குறித்த செய்தியில் (Focus) ஒரு வரலாற்றுப் பதிவை வெளியிட்டிருக்கிறது. சமஸ்கிருதம் ஒரு முன் நிபந்தனை (Sanskirit as Prerequisite) என்ற தலைப்பில் வந்துள்ள செய்தி:

“சென்னை மாகாணத்தில் மருத்துப் படிப்பில் சேருவதற்கு சமஸ்கிருதத்தில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும் என்ற முன் நிபந்தனை இருந்தது. சமஸ்கிருதம் தெரியாத மாணவர்களுக்கு மருத்துவம் படிக்க இது ஒரு தடை. இந்த நிபந்தனை நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர், இராமராயநிங்கார் முதல்வராக இருந்தபோது நீக்கப்பட்டது” என்று அந்த செய்தி கூறுகிறது. தனது குடும்பத்தைச் சேர்ந்த மாணவருக்கு, சமஸ்கிருதம் தெரியாத காரணத்தால் மருத்துவம் பயில முடியாமல் போய் விட்டது என்று தமிழறிஞரும் நீதிக்கட்சி செயலாளராக இருந்தவருமான கி.ஆ.பெ. விசுவநாதம், தனது வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இன்று நீட் தடை என்றால் அன்று சமஸ்கிருதம் தடையாக இருந்தது.

‘நீட்’ வேண்டும் என்று தமிழக ஆளுநர் கூறுகிறார். ‘நீட்’ இல்லாவிட்டால், கிராமப் புற ஏழை – எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரைக்கு நேர் எதிரான கருத்தை எவ்வித தரவுகளுமின்றி முன் வைத்து தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாவை திருப்பி அனுப்புகிறார். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மசோதா எதிராக இருந்தால் திருப்பி அனுப்பலாம் என்று அரசியல் சட்டத்தின் 200 பிரிவு கூறுகிறது. அந்தப் பிரிவை தவறாகப் பயன்படுத்தவும் ஆளுநர் தயங்கவில்லை. மைனாரிட்டி கல்வி நிறுவனமான வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி ‘நீட்’டிலிருந்து விலக்குக் கேட்டு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம், கல்லூரி நிர்வாகத்தின் மனுவை தள்ளுபடி செய்து ‘நீட்’ அந்தக் கல்லூரிக்கு தேவை என்று தீர்ப்பு அளித்தது. இப்போது தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றியுள்ள மசோதாவுடன் அந்த வழக்கை இணைப்பது முறையற்றது என்று ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். சந்துரு உள்பட பல சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தனியார் மருத்துவக் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை தடுத்து நிறுத்துவதற்குத் தான் நீட் கொண்டு வரப்பட்டது என்ற வாதமும் அர்த்தமிழந்து விட்டது. தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை பல்கலைக் கழகங்களில் ‘நீட்’ தேர்வுக்குரிய தகுதி மதிப்பெண்கள் பெறாமல் குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்களையும் சேர்க்கலாம் என்று விதிவிலக்கு தரப்பட்டு விட்டதால் கட்டணக் கொள்ளைக்கு தாராளமாக கதவு திறந்து விடப்பட்டுள்ளது. குறைந்த மதிப்பெண் பெற்றவரும், பணம் இருந்தால் போதும் இடம் கிடைத்து விடும். அதே நேரத்தில் அரசுக் கல்லூரிகளில் ‘நீட்’ தேர்வில் வெற்றி பெற்று குறைந்த கட்டணத்தில் படிக்கும் வாய்ப்பை நீட் பறித்து விட்டது. பயிற்சி மய்யங்களில் பெரும் கட்டணம் செலுத்தி ஓராண்டுக்கு மேல் காத்திருந்து குறைந்தது 2 முறை தேர்வு எழுதும் மாணவர்களே அரசு மருத்துவக் கல்லூரியில் சே முடியும். 7.5 சதவீத அரசுப் பள்ளி இடஒதுக்கீட்டின் வழியாகப் படிக்க வரும் மாணவர்கள்கூட ‘நீட்’ தேர்வை எழுத வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

எல்லாவற்றையும்விட ஒரு மாநில அரசுக்கு தனக்கான கல்விக் கெள்கையை வகுத்துக் கொள்ளும் உரிமையை ஒன்றிய ஆட்சி பறிக்கக் கூடாது; தமிழ்நாடு தனக்கான கல்விக் கொள்கைகளை இலவசக் கல்வி, சத்துணவு, இலவசப் பாட நூல், இலவசப் பேருந்துப் பயணம், இலவச சீருடை, இலவச சைக்கிள், இலவச கணினி போன்ற கட்டமைப்புகளால் தனது கல்விக் கெள்கையை சமூக நீதியோடு பிணைத்து வளர்த்தெடுத்து பிற மாநிலங்களுக்கே வழிகாட்டி வருகிறது. எனவே இந்தக் கல்விக் கொள்கையின் உயிர்த் துடிப்பாக இயங்கும் சமூக நீதியைக் குலைக்க வந்த ‘நீட்’ என்ற போட்டித் தேர்வு முறையை தமிழ்நாடு ஒரு போதும் ஏற்காது என்பதுதான் தமிழ்நாட்டின் ஒருமித்த உணர்வு. இதை டெல்லி ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### சிலை சீன நாட்டின் தயாரிப்பு : விலை ரூ.1000 கோடி

# ‘இராமானுஜர்’ சிலையும் வேத – புரோகித ஆதீக்கமும்

இராமானுஜர் சிலையை பிரதமர் மோடி தெலுங்கானாவில் திறந்து வைத்திருக்கிறார். ஜீயர் மடம் ஒன்று இந்த சிலையை நிறுவியிருக்கிறது. சிலையின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய். நெற்றியில் வைணவ தென்கலை நாமத்தோடு தோன்றி சிலையைத் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார் மோடி. இராமானுஜர் தேச ஒற்றுமைக்காகக் குரல் கொடுத்தவர் என்று பேசியிருக்கிறார். இராமானுஜர் காலத்தில் இந்தியா என்ற தேசமே உருவாகவில்லை. பிறகு எப்படி அவர் தேச ஒற்றுமைக்காக குரல் கொடுத்திருக்க முடியும்? இராமானுஜர் சமூக ஒருமைப்பாட்டிற்காக குரல் கொடுத்திருக்கிறார் என்றால் அதில் நியாயம் இருக்க முடியும்.

வேதங்களை பிராமணர்கள் மட்டுமே படிக்க வேண்டும், பிராமணர்கள் மட்டுமே கேட்க முடியும் என்று இருந்த நிலையை கட்டுடைத்து அனைவருக்கும் வேதம் படிக்க, கேட்க உரிமையுண்டு என்று கலகம் செய்தவர் இராமானுஜர். திருக்கோட்டியூர் கோவில் கோபுரத்தில் ஏறி வேதத்தை ஓதி அனைத்துப் பொதுமக்களும் இதைக் கேளுங்கள் என்று வேதத்தை ஓதியதாக வரலாற்றுப் பதிவுகள் உண்டு. ஆனால் இந்த சிலை திறப்பிற்கு இந்தியாவில் இருந்து ஆயிரக்கணக்கில் வேத புரோகிதர்கள் அழைக்கப்பட்டிருக் கிறார்கள். அத்தனை பேரும் “பிராமண”ப் புரோகிதர்கள். உண்மையிலேயே இராமானுஜருக்கு நன்றி செலுத்தியிருக்க வேண்டுமென்றால், அனைத்து ஜாதியைச் சார்ந்த பண்டிதர்களை அழைத்து யாகத்தை நடத்தியிருக்க வேண்டும், வேதத்தை ஓதியிருக்க வேண்டும். ஆனால் வழக்கம் போல் வேத பார்ப்பனியம் இராமானுஜரை தனது அடையாளமாக்கிக் கொண்டு ஜீரணித்துக்கொண்டு விட்டது. அவரது கலகக் குரலை சிதைத்து மவுனமாக்கி விட்டது.


ஒரு பக்கம் சிலைகளைத் திறக்கிற போது ஜாதி ஒழிப்பு, சமத்துவம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவை இன்று ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பது ஜாதி என்ற கட்டமைப்பு தான். இதை ஒழிப்பதற்கு இவர்கள் எந்த முயற்சியும் செய்வது கிடையாது. கர்நாடகா மாநிலத்தில் இருந்து 6.02.2022 அன்று ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. அங்கே இருக்கிற சிக்மகளூர் மாவட்டத்தில் சஸியபுரா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஷோமா சங்கர் என்ற இளைஞர் தலித் பெண் ஒருவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இரு குடும்பங்களின் சம்மதத்தோடு அந்த திருமணம் நடந்திருக்கிறது. பெங்களூரில் இருவரும் வேலை செய்து வந்துள்ளனர். கொரோனா காலத்தில் வேலை பறிபோக இருவரும் மீண்டும் அவர்கள் கிராமத்திற்கு திரும்பியிருக்கிறார்கள். ஆனால் கிராமத்தில் ஜாதியச் சமூகம் இந்தக் குடும்பத்தை புறக்கணிக்க வேண்டும் என்று முடிவெடுத்து இவர்களிடம் தொடர்போ, உறவோ வைத்துக் கொண்டால் 5000 அபராதம் என்று அறிவித்துவிட்டது. உடனே அந்த இளைஞர் கிறிஸ்துவ மதத்திற்கு மாறப் போவதாக அறிவித்தார். ஆடிப்போன ஆட்சி நிர்வாகம் கிராமத்திற்கு படையெடுத்து கிராம மக்களை சந்தித்து புறக்கணிப்பை விலக்கிக் கொள்ளுங்கள் என்று கூறியதாக செய்தி வந்துள்ளது. இது ஒரு உதாரணம் தான்.

இந்த நிலை இந்தியா முழுவதும் மட்டுமல்ல, இங்கிருந்து அமெரிக்கா சென்றுள்ள ஜாதி வெறியர்கள் பார்ப்பனர்கள், உயர்ஜாதிக்காரர்கள் பல்கலைக் கழகங்களில் ஜாதியை திணித்துக் கொண்டிருக்கிறார்கள். கலிபோர்னியா மாகாணத்தில் இதை எதிர்த்து ‘Equality Lab’ என்ற அமைப்பு கடுமையான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. எப்படி இனத்தின்படி பாகுபாடு காட்டக்கூடாது என்று பல்கலைக் கழக வளாகங்களில் தடை செய்யப்பட்டிருக்கிறதோ இன வகையில் பாகுபாடு காட்டுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறதோ அதே போல ஜாதியும் பாகுபாடு காட்டுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். தற்போது ஜாதியம் ஒரு பாகுபாடு அமைப்பு என்று பல்கலைக்கழகம் சட்ட விதிகளில் இணைத்து விட்டது. அமெரிக்கா முழுவதும் 23 ற்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் ஜாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்கள் ஜாதியும் ஒரு பாகுபாடு அமைப்பு என்பதை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அமெரிக்காவில் இருக்கிற ‘Hindu Foundation’ என்று சொல்லப்படுகின்ற இந்து பார்ப்பன உயர்ஜாதி அமைப்பு இதைக் கடுமையாக எதிர்க்கிறது. ஜாதி இருக்க வேண்டும், ஜாதி ஒரு பாகுபாடு அமைப்பு அல்ல என்றெல்லாம் அவர்கள் விதண்டாவாதம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆக இந்தியாவினுடைய கிராமங்களிலிருந்து அமெரிக்கா வரை ஜாதி கொடி கட்டிப் பறக்கிறது, வேத பார்ப்பனியக் கூட்டம் போகின்ற நாடுகளுக்கெல்லாம் ஜாதியை தூக்கிக் கொண்டு போகிறது.

மற்றொரு புறம் இராமானுஜர் சிலையை திறந்து வைத்து சமத்துவத்தைப் பற்றியும், அனைத்து ஜாதியினரும் கோவிலுக்குள் வரலாம் என்று இராமானுஜர் பாடுபட்டார் என்றும் மோடி போன்றவர்கள் சடங்கிற்காக பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜாதி கட்டமைப்பைத் தகர்த்து எரிவதற்கு இங்கே எவரும் தயாராக இல்லை.

### இஸ்லாம் மதத்திலும் மூட நம்பிக்கை உண்டு...



நான் இஸ்லாம் மதக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவையெல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்பதாகவோ யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மதத்தில் எதை எதைக் குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கம், பாமரத்தன்மை என்கின்றோமோ அவை போன்ற சில நடவடிக்கைகள் இஸ்லாம் மதத்திலும் சிலர் செய்கிறார்கள். சமாதி வணக்கம், பூசை, நைவேத்தியம் முதலியவை எல்லாம் இஸ்லாம் சமூகத்திலும் இருக்கின்றன.

மாரியம்மன் கொண்டாட்டம் போல், ‘இஸ்லாம்’ சமூகத்திலும் ‘அல்லாசாமி பண்டிகை ’ நடக்கிறது. மற்றும் நாகூர் முதலிய ‘ஸ்தல’ விஷேசங்களும், சந்தனக்கூடு, தீ மிதி முதலிய உற்சவங்களும் நடை பெறுகின்றன. இவை குர்ஆனில் இருக்கின்றதா, இல்லையா என்பது கேள்வியல்ல. ஆனால், இவை ஒழிக்கப்பட்ட பின்புதான் எந்தச் சமூகமும் தங்களிடம் மூடநம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்ள முடியும். உலகமெல்லாம் ஒரு கொள்கையின் கீழ் வர வேண்டுமானால் இஸ்லாம் கொள்கையும் இணங்க வேண்டும். உலகம் சீர்திருத்தத்துக்கு அடிமைப்பட்டது என்பதை மறவாதீர்கள்.

குடி அரசு – 02.08.1931

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம் (3)

# பெரியார் காண விரும்பியது மதமற்ற சமுதாயத்தைத் தான்

***ஜாதி இழிவு ஒழிய மதமாற்றம் குறித்துப் பேசினாலும் பெரியார் விரும்பியது மதம் அற்ற ஒரு சமுதாயத்தைத்தான் என்று கழகத் தலைவர் குடியாத்தம் நவம். 07, 2021இல் நடந்த நூல் ஆய்வுக் கூட்டத்தில் குறிப்பிட்டார். அவரது உரையின் தொடர்ச்சி.***

*காந்தியுடன் பெரியார் உரையாடலை நடத்தினார். "இந்து மதத்தை திருத்தலாம் என்று கூறுகிறீர்கள். ஆனால், அதை பின் வருபவர்களும் செய்வார்களே, நீங்கள் அவர்களுக்கு (பார்ப்பனர்கள்) ஆதரவாக இருக்கும் வரை விட்டு வைத்திருக் கிறார்கள். கொஞ்சம் எதிராக திரும்பினாலும்கூட விட்டு வைக்க மாட்டார்கள்" என்று பெரியார் 1927இல் கூறினார். பின் அதுதான் நடந்தது. அப்படிப்பட்ட இந்து மதத்தின் மீது வருகிற கோபம், அதன் பின் வரும் காலங்களில் இந்து மதத்தின் தீமைகளை, சூழ்ச்சிகளை பதிவு செய்து வருகிறார். அரசியல் சட்டத்திலும் புகுந்து கொண்டதே என்றெல்லாம் கோபித்துக் கொண்டார். அதை யொட்டித்தான் சட்ட எரிப்புப் போராட்டத்தையே நடத்துகிறார். இதை காரணமாக வைத்து சிலர் அம்பேத்கருக்கும் பெரியாருக்கும் இடைவெளி ஏற்படுத்த முயலுகிறார்கள். "அம்பேத்கர் எழுதிய சட்டத்தை பெரியார் எப்படி எரிக்கலாம்" என்று கேட்கிறார்கள். அம்பேத்கரே எரிக்கப் போகிறேன் என்று 1953இல் கூறினார். பெரியார் 1957இல் எரித்தார். ஆந்திரா பிரிவினையின்போது விவாதம் நடைபெறு கிறது. அப்போது அம்பேத்கரைப் பார்த்து "நீ தானே எழுதினாய்" என்று பலர் கேட்கிறார்கள். அம்பேத்கர் அப்போது கூறினார் "ஆம் நான் தான் எழுதினேன். உங்களுக்கு இதே வழக்கமாகப் போய் விட்டது. அதை எரிக்கப்போகிற முதல் ஆளும் நான் தான்" என்று 1953 இல் மாநிலங்களவையில் பதிலளித்தார்.*

*1954 இரங்கூன் புத்த மாநாட்டின் போது பெரியாரிடம் அம்பேத்கர் கூறினார்,* "I was holding the pen. It was moved by the brahmins" *(நான் பேனாவை மட்டும் தான் பிடித்தேன், பார்ப்பனர்கள் தான் அசைத்தார்கள்) என்று கூறினார். தனது விருப்பத் துக்கு மாறாக எழுதப்பட்டதை தெரிவிக்கிறார்.*

*விருதுநகர் மாநாட்டை குறிப்பிட்டேன். அதில் தான் மத ஒழிப்பு தீர்மானத்தை கொண்டு வந்ததாக வும் கூறினேன். அதே மாநாட்டில் தான் "பழக்க வழக்கம்" என்ற சொல் இருக்கக் கூடாது என்பதையும் பெரியார் தீர்மானமாக கொண்டுவருகிறார். ஆனால் அப்போது சட்டம் எழுதப்படவில்லை. அப்போது காங்கிரஸ்காரர்கள் 'பிரஜா உரிமை திட்டம்' என்ற ஒன்றை எழுதினார்கள். மோதிலால் நேரு கமிட்டி எழுதியது. இறுதியாக 1931இல் நடைபெற்ற 'கராச்சி காங்கிரஸ் மாநாடு' அதை ஏற்றுக் கொண்டது. அதைப் பற்றி மூன்று தலையங்கங்கள் "கராச்சி மாநாடு" என்று 'குடிஅரசு' பத்திரிகையில் பெரியார் எழுதுகிறார். அதில், "ஒன்று பிறர் மனம் புண்படக் கூடாது, அடுத்து பழக்க வழக்கத்தை புகுத்தி விட்டான், மூன்றாவது சிறுபான்மை மக்களின் மொழியை கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிறான். இங்கே சிறுபான்மை மதம் என்று கூறவில்லை. சிறுபான்மை மக்கள் என்கிறான். சிறுபான்மை மக்கள் என்றால் பார்ப்பானை குறிக்கும்" என்கிறார் பெரியார். மூன்றாம் மாதம் கராச்சி மாநாட்டிற்கு மறுப்பு மாநாடாகத் தான் விருதுநகர் மாநாட்டை பெரியார் நடத்துகிறார். அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருந்த அந்தப் பிரிவுகளைத் தான் 1957இல் எரித்தார். இன்று வரை அர்ச்சகர் உரிமைக்கு கூட பழக்க வழக்கம் என்பதைத் தான் கூறுகிறார்கள். பழக்க வழக்கம் என்பது, "எழுதப்பட்ட சட்டத்தை விட உயர்வானது" என்று எழுதியிருந்தது. இதைத் தான் எரித்தார். எனவே 1932க்குப் பிறகு இருவரும் தீவிரமாக மதத்தை விட்டு வெளியேறுவதை பேசுகிறார்கள். பெரியார் வேறொரு மதத்திற்கு செல்லும்போது இஸ்லாமை பரிந்துரைக்கிறார். பௌத்தம் என்பது ஏறக்குறைய இந்து மதம் போன்றே உள்ளது. அம்பேத்கர் மதம் மாறுவதாக அறிவித்த போது கூட "குறைவான ஆட்களுடன் செல்ல வேண்டாம். இலட்சம் பேருடனாவது செல்லுங்கள். அப்போது தான் மதிப்பார்கள்" என்று பெரியார் கூறினார். யாருக்காக மதமாற்றத்தை பரிந்துரைத்தார்? ஜாதிக் கொடுமைகளால், தீண்டாமைக்குள்ளாக்கப்பட்டு, தெருவில் நடக்க தடை விதிக்கப்பட்டிருப்பவர் களுக்கு இஸ்லாத்தை பரிந்துரைத்தார். கடவுள் மறுப்பையும் அந்த புள்ளியில் இருந்து தான் பார்க்கிறார். கடவுள் மறுப்பை மற்றவர்கள் பார்ப்பதற்கும் இவர் பார்த்தற்கும் வித்தியாசம் உண்டு. ஸ்டீபன் ஹாக்கின்ஸ் போன்ற விஞ்ஞானிகள் அறிவியல் ரீதியாக கடவுள்களை மறுத்தனர். ஆனால் பெரியார் அப்படி கூறவில்லை.*

*"மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக் கூடாது; கோயிலுக்குள் போகக் கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்பதைப் போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலை யின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ; சமுத்திரத் தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப் பதைப் பார்த்த பிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்" இவ்வளவு கொடுமைகளை பார்த்தும் கடவுள் என்பவர் இருக்கிறார் என்பதை எப்படி நம்ப முடியும் என்று தான் கேட்கிறார்.*



**சிந்தனையாளன் சென்னைக்கு செல்ல வேண்டும் என்று சிந்திக்கிறவன். செயல்பாட்டாளன் அதில் பயணிக்கிறவன். முதலில் வேலூர், பிறகு திருப்பெரும்பதூர் அதன் பிறகு தான் சென்னைக்கு செல்ல முடியும். அப்படியாகத்தான் பெரியாரின் மதமாற்றக் கருத்துக்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

*இப்படித்தான் பெரியார் கேள்வி கேட்டார். இப்படிப்பட்ட கடவுள் மறுப்பைத் தான் பெரியார் பேசினார். சமூக சமத்துவத்திற்குத் தடையாக இருக்கிற கடவுளை மறுங்கள் என்பது தான் பெரியார் கூறியது. அப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் இங்கே இருக்கக்கூடிய மதம் ஜாதிக் கொடுமைகளை நிகழ்த்தாமல் இருந்திருந்தால் அவர் கடவுள் மறுப்பை பேசாமல் தான் இருந்திருப்பார் என்பது தான் எனது கருத்து. "ஜாதியும் மதமும் ஒன்றி விட்டது என்றால் இரண்டையும் தான் எரிப்பேன், இல்லை இல்லை மதம் கொடுமைகளை நிகழ்த்தவில்லை என்றால் பிரித்து விடுங்கள் ஜாதியை மட்டும் எரிக்கிறேன். இல்லை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது என்றால் இரண்டையும் தான் எரிப்பேன் என்றார். இல்லை இல்லை மதம் சாஸ்திர, சம்பிரதாயங்களுடன் இணைந்தது என்றார்கள். அப்போ மதம், சாஸ்திரங்களை பிரித்துவிடு என்றார். இல்லை இல்லை மதம், சாஸ்திரம், ஜாதி அனைத்தும் பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்தே உள்ளது. என்றனர். அப்போது நான் என்ன செய்ய முடியும் நான் வைக்கும் தீயில் அதுவும் சேர்ந்து தான் எரியும் என்றார். இல்லை இல்லை கடவுளும் இதனுடன் இணைந்தவர் என்றனர். எனவே கடவுள் புனிதமானவர் என்றால் அவரையும் தனியாக பிரித்து விடு, ஜாதியுடன் பிரிக்க முடியாத வேதம், மதத்தை எரிக்கிறேன் என்றார். கடவுளும் இதனுடன் சேர்ந்திருந்தார் என்றால் அவரை சேர்த்து அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்றார்.*

*ஜாதி இருக்கும், நான் இழிவுபடுத்தப்படுவேன், அவருக்கு சக்தி உண்டு ஆனால் விருப்பமில்லை என்றால் அந்தக் கடவுள் எனக்கு எதற்கு? இப்படிப்பட்ட வாதங்களைத் தான் பெரியார் வைத்துக் கொண்டு வந்தார். இதில் அவருக்கு என்ன நோக்கம் இருந்திருக்க முடியும் ஜாதி ஒழிப்பைத் தவிர? பெரியாரின் இலட்சியமாக, ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, பொதுவுடமை, தனித்தமிழ்நாடு இவைகளைத்தான் நான் கூறுவேன். கடவுள் மறுப்பு அவரது இலட்சியமில்லை. ஜாதியை ஒழிக்க, சமத்துவத்தை நிலைநாட்ட கையில் எடுத்த ஆயுதங்களில் ஒன்று கடவுள் மறுப்பு. இப்படித்தான் கடவுள் மறுப்பை பெரியார் பேசினார். முதன்மையான நோக்கமோ, இலட்சியமோ அவருக்கு அது இல்லை.*

*பெண்ணுரிமையைப் பற்றி பெரியார் பேசுகிற போது, "ஜாதியைக் காப்பாற்றுவது பெண்ணடிமைத் தனம் தான்" என்று 1926இல் கூறுகிறார். அம்பேத்கர், இந்தியாவில் ஜாதிகள் என்ற நூலில் இதே கருத்தை 1916இல் கூறியிருக்கிறார். ஏன் பெண்ணை எரிக்கிறார்கள்? ஒரு ஆண் இறந்துவிட்டால், ஒரு பெண் அதிகமாக இருப்பார். ஒருவேலை அவர் வேறு ஜாதியில் திருமணம் செய்துவிடக் கூடாது என்பதற்காக. ஒருவர் கொல்வதற்கு மனமில்லை யென்றால் வீட்டில் அடைத்து வை. 'நீ கெட்ட சகுனம் வெளியே செல்லக் கூடாது, சுவையில்லாத உணவை சாப்பிடு, நிறமில்லாத உடையை உடுத்திக் கொள், பாயில்லாத படுக்கையில் படு, வெளியே நடமாடாதே' போன்று சிறையில் வைப்பது. அது மரண தண்டனை, இது ஆயுள் தண்டனை. ஒரு வேலை பெண் இறந்துவிட்டால், சமமான வயதில் பெண் கிடைக்கவில்லை என்றால், குழந்தையை திருமணம் செய்து வை, உன்னுடைய ஜாதியிலேயே செய்து வை. இதைத் தான் அம்பேத்கர், "உடன் கட்டை ஏறுதலானாலும், விதவைக் கொடுமை என்றாலும், குழந்தைத் திருமணம் என்றாலும் ஜாதியைப் பாதுகாக்கத்தான்" என்று அம்பேத்கர் 1916 இல் கூறினார். பெரியார் 1926 இல் தானே கூறினார். என்று கேட்பார்கள். அப்படிப் பார்க்க வேண்டாம் என்று நான் கருதுகிறேன். இருவரும் ஒரே சிந்தனையை கொண்டவர்கள். பாதையில் வேண்டு மானால் மாற்றம் இருந்திருக்கலாம். அது அவரவர் வாழ்ந்த சூழலைப் பொறுத்து மாறுபடும். காலம் தான் முடிவு செய்யும்.*

*இந்த புத்தகத்தில் நாடார்களைப் பற்றி ஒரு செய்தி சொல்கிறார். "ஒரு சமுதாயம் பூராவும் ஜாதி, மத, தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் என்று சொல்லும்படி இல்லை. தமிழ்நாட்டில் நாடார் சமூகத்தில் அநேகருக்கு ஜாதி, மத, தெய்வ நம்பிக்கை கிடையாது" என்கிறார். தற்போது நிலைமை அப்படியா இருக்கிறது. அவர் இந்த கருத்தை பேசுகிற காலத்தின் போது அப்படி இருந்தது. தற்போது இந்து முண்ணனி போன்ற இந்து அமைப்புகளில் நிறைய செயல்படுகிறார்கள். பேசப்படுகிற காலத்தின் சூழலைப் பொருத்திப் பார்க்க வேண்டும். பல செய்திகளில் தேதி குறிப்பிட மாட்டார்கள். அதனால் சூழல், காலத்தைப் பொருத்திப் பார்ப்பதில் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது. பெண் ஏன் அடிமையானாள் என்ற நூலில், பெரியார் முன்னுரையாக 1.1.1942 என்று இருக்கும். பல பேர் அந்த தேதியை வைத்து பெரியார் 1942இல் இதைப் பற்றி எழுதியிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டனர். ஆனால், அந்தப் புத்தகத்தில் இடம் பெற்ற கட்டுரைகளில், 1926 இல் முதல் கட்டுரை எழுதப்பட்டது. இறுதியான கட்டுரை 1931இல் முடிந்துவிட்டது. இந்த ஆண்டு களுக்குள் எழுதப்பட்டதுதான் 'பெண் ஏன் அடிமையானாள்'. தேதி குறிப்பிடாத காரணத்தினால் 1942இல் தான் இது பெரியார் கருத்து என்று கருதிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிட்டபோது தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டோம். கவிஞர் தம்பி வெளியிட்டபோதுகூட தேதியை குறிப்பிடுங்கள் என்று கூறினோம். இந்த காலகட்டங்களில் பெரியாரின் பார்வை இதுவாக இருந்தது என்று புரிந்து கொள்ள உதவியாக இருக்கும். அப்போது பெண் உரிமையை மட்டும் பேசுபவர்கள் இருந்திருப்பார்கள். இப்போது மானுட விடுதலை அதாவது பெண் விடுதலையையும் பேசுகிறோம்.*

*பெரியார் 1925இல் குடி அரசு ஏடு தொடங்குகிற போதே ஒன்றை எழுதினார். "இந்த குடி அரசு ஏடு தன் மதிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளைக் கொண்டதாக நான் இந்த ஏட்டை நடத்துகிறேன்" என்று எழுதினார். பல பேர் கூறுவார்கள் தங்க பெருமாள் பிள்ளை தான் தலையங்கத்தை எழுதியதாகக் கூறுவார்கள். 1939இல் 'நான் காயலாக இருந்த போது ஒரு தலையங்கத்தைத் தவிர மற்ற அனைத்தும் நான் தான் எழுதினேன்' என்று பெரியார் குறிப்பிட்டிருக்கிறார். 'தன் மதிப்பு' என்பது அனைத்திலிருந்தும் விடுதலை என்பதாகப் பொருள் கொள்ள வேண்டும். தோழர் புனிதப் பாண்டியன் உரையின் போது, அம்பேத்கரின் சட்ட அறிமுக உரையைப் பற்றி குறிப்பிட்டார். அந்த உரையில் ஒரு செய்தியை அனைத்து இடங்களிலும் சொல்வதுண்டு, தற்போதும் குறப்பிட்டுவிட வேண்டும், அந்த உரை* 'We the people of India' *என்று தொடங்கும். 'இந்திய மக்களாகிய நாம்' என்று தான் தொடங்கும். 'என்னுடைய அரசியல் நண்பர்கள், ஏன் இந்திய தேசத்தாராகிய நாம் என்று போடக்கூடாது?' என்று என்னை கேட்டார்கள். நான் கூறினேன், "பல்லாயிரக்கணக்கான ஜாதிகளாக பிரிந்து கிடக்கிற நாம் எப்படி ஒரு தேசமாக முடியும்? இனிமேல் தான் தேசமாகப் போகிறோம்" என்று கூறியதோடு அம்பேத்கர் நிறுத்தவில்லை.* "Caste is Anti National" *'ஜாதி தான் தேச விரோதமானது' இந்திய நாடு ஒரு தேசமாக வேண்டுமென்றால் ஜாதி ஒழிய வேண்டும்". அது இந்திய விடுதலைக்கும் பொருந்தும், தமிழ்நாட்டு விடுதலைக்கும் பொருந்தும்.*

*ஜாதியைப் பற்றிப் பேசாமலேயே பலர் தமிழ் தேசிய விடுதலையைப் பற்றிப் பேசுகிறார்கள். அப்படிப் பேச முடியாது, அப்படியே விடுதலை வந்தாலும் அது பயன்படவே பயன்படாது. தற்போதைய இந்திய விடுதலையைப் போலத்தான் இருக்கும். ஜாதி ஒழிப்பை இலக்காகக் கொள்ளாமல் நகரும் எந்த இயக்கமானாலும் அது வெகு மக்களுக்குப் பயன் தராது. நான் கூற வருவது என்னவென்றால் நான் கூறியது அனைத்தும் பட்டியலின மக்களுக்கு மட்டுமல்ல சூத்திர மக்களுக்கும் பொருந்தும். அனைவருக்கும் கோவில் நுழைவு இல்லை, கருவறை நுழைவு இல்லை. பெரியார் கூறுவார், 'உனக்கும் அவனுக்கும் இரண்டு முழம் தான் வித்தியாசம். அவனை விட நீ இரண்டு முழம் தான் முன்னாடி நிற்கிறாய்' என்பார். அதனால் தான் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் உரிமையைக் கேட்டார் பக்தனாவதற்கா அனைவரும் அர்ச்சகராகக் கேட்டார். சூத்திரனாக இருக்க மாட்டேன் என்ற மனித உரிமைக்காகக் கேட்டார். மதம் மாறச் சொல்வதும் அப்படித்தான் 'மோட்சம் போகவா மதம் மாற சொல்கிறேன், இழிவு போக ஒரு பரிந்துரை' என்று கூறுகிறார். அவர் விருப்ப*

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## நங்கவள்ளி ஆர்ப்பாட்டத்தில் கொளத்தூர் மணி கோரிக்கை

# மத நல்லிணக்க சீர்குலைவுத் தடுப்புச் சட்டம் தமிழ்நாட்டில் வரவேண்டும்

நங்கவள்ளி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, 01.02.2022 செவ்வாய் மாலை 4 மணியளவில் தஞ்சை மாவட்டம் மைக்கேல்பட்டியை சேர்ந்த பள்ளி மாணவி தற்கொலையை காரணம் காட்டி தமிழகத்தில் பொது அமைதியைக் குலைக்கப் பொய்யான தகவல்களைப் பரப்பி வரும் மதவாத பா.ஜ.கவினரைக் கண்டித்தும், தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையைக் கைது செய்யக் கோரியும் கண்டன ஆர்ப் பாட்டம் நங்கவள்ளி நகரத் தலைவர் த.கண்ணன் தலைமையில் நடை பெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். உரையில், “தஞ்சை மாவட்டம் மைக்கேல்பட்டி என்ற ஊரில் படித்த ஒரு மாணவி தற்கொலை செய்து கொண்டதையே ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, பொய்யான செய்திகளை திட்டமிட்டு பரப்புவதும், அதை சமூக நல்லிணக் கத்திற்கு எதிராகப் பரப்புவதும், சமூகப் பதற்றத்தை உருவாக்குகிற நோக்கத் தோடும், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்கும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக பாஜக தலைவர் அய்.பி.எஸ் அதிகாரி யாக ஒரு காலத்தில் இருந்ததாக சொல்லப்படுகின்ற அண்ணாமலை அந்த மாணவியின் முழுப் படத்தை வெளியிட்டுள்ளார். மாணவியின் முழுப் பெயரையும் வெளியிட் டிருப்பது சட்டப்படி தவறு என்று அவருக்கே தெரியும். அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஏற்கெனவே, கிருத்துவ மதப் பரப்புரைக்கு சென்றிருந்தவர்களை அடித்து விபூதி பூச வைத்த முத்துவேல் என்பவர் தான் இந்த காணொளியை பதிவு செய்திருக்கிறார். அவர்கள் மீது சமூக பதற்றத்தை உருவாக்கும் பிரிவு வழக்குகளை பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இரண்டாவதாக மதமாற்ற தடைச் சட்டத்தைப் பற்றி பேசுகிறார்கள். கட்டாயப்படுத்தி மதம் மாற்றக் கூடாது. நாம் கூறுகிறோம், மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கிற தடைச் சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டும். இந்த சட்டத்தைக் கொண்டு வந்தால் தான் பாஜகவினரை கட்டுப்படுத்த முடியும். மத நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் தடை சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்” என்று உரையாற்றினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் சி.பி.அய். ஒன்றிய செயலாளர் பழ. ஜீவானந்தம், தி.மு.க தலைமைக் கழக பேச்சாளர் கோனூர் வைரமணி, திராவிடர் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் சீ. செல்வமுருகேசன், விசிக மேட்டூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் எஸ்.டி.பி.அய். மாவட்ட செயலாளர் பி. ஷரீப் பாஷா, தி வி க மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, நங்கவள்ளி பேரூர் கழக திமுக செயலாளர் கே.பி.. வெங்கடாசலம், திவிக தலைமைக்குழு உறுப்பினர் அ.சக்திவேல் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.




நிறைவாக அ.செ.சந்திரசேகர் நன்றியுரை கூற ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது. ஆர்ப்பாட்டத்தில் கொளத்தூர், தண்டா, தார்க்காடு, மேட்டூர், மேட்டூர் சுளு, நங்கவள்ளி, இளம்பிள்ளை, வனவாசி, வெள்ளார் ஆகிய பகுதியிலிருந்து தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தி.வி.க.வின் புதிய 52 மின்னூல்கள்

பல்வேறு காலகட்டங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாடுகள், பரப்புரைகள் மற்றும் பொதுக் கூட்டங்களில் தலைவர்களால் பேசப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த உரைகள் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் அவ்வப்போது எழுத்து வடிவில் வெளியிடுவது உண்டு. அந்த வகையில் கடந்த 10 ஆண்டுகளில் முழக்கம் இதழ்களில் வெளிவந்த பேச்சுக்கள் மற்றும் செய்திகளின் தொகுப்பு பல்வேறு தலைப்புகளில் திரட்டப்பட்டு இளைய தலைமுறை மீண்டும் பெரியாரியலை உள்வாங்கி கொள்ள கழகத் தலைமையின் வழிகாட்டுதலில் இணைய தளப் பிரிவு தோழர்களால் மின்னூலாக்கி பதிவேற்றி உள்ளோம். கீழுள்ள இணைப்பின் வாயிலாகவோ கழகத்தின் இணையதளத்திற்கு சென்று தேவையான புத்தகங்களை தரவிறக்கி படித்துக் கொள்ளலாம். https://dvkperiyar.com/?page_id=17518

**திவிக வெளியீடுகள் பட்டியல் :** அணுஉலையின் ஆபத்து - திவிக வெளியீடு; இந்து ராஷ்டிரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை என்ன? - அப்துல் சமது; இராஜராஜசோழனின் கதை என்ன - திவிக வெளியீடு; இளைய தலைமுறை பெரியாரை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்? - பூபாலன்; கோட்சே இந்து பயங்கரவாதிதான் - திவிக வெளியீடு; தமிழர்ப் புத்தாண்டு, தை முதல் நாளே! 0 திவிக வெளியீடு; திராவிடர் விடுதலைக் கழகம் தொடக்கம்; திவிக தேர்தல் நிலைப்பாடுகள்; தூக்கு தண்டனை - சில வரலாற்று தகவல்கள் - தமிழச்சி தங்கப்பாண்டியன்; நிலம் பாழ் - நீர் மறுப்பு - நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டு உரைகள்- திவிக வெளியீடு; நிறுவனமயமாக்கப்பட்ட பெரியார், தத்துவமயமாக்கப்பட வேண்டும்! - பசு. கவுதமன் நேர்காணல் - திவிக வெளியீடு; புதிய கல்வித் திட்ட நகல் - பிரின்ஸ் கஜேந்திர பாபு; பெரியார் அம்பேத்கர் கருத்துக்களை முன்னெடுப்பதே சிறுபான்மை மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு- ஆளூர் ஷாநவாஸ்; பெரியார் நடத்திய முதல் சுயமரியாதை கத்தோலிக்க கிறித்தவ திருமணம் - திவிக வெளியீடு; பெரியாரியத்தை வீழ்த்தி விட முடியாது - தொல் திருமாவளவன்; பெரியாரியம் காலத்தின் கட்டாயம் - வழக்கறிஞர் ப.பா. மோகன்; பெரியாரின் சிந்தனைகளுக்கு தத்துவ மரபுகளிலே வேர்கள் உண்டு! - பேராசிரியர் ந.முத்து மோகன் பெரியாரின் மனித நேயம் - மறை திருநாவுக்கரசர்; மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்க மாநாடு (பள்ளிபாளையம்); மனு சாஸ்திர எதிர்ப்பு மாநாட்டு உரைகள்- திவிக வெளியீடு; முல்லைப் பெரியாறு; வர்ணபேதம் சாதிகளானது எவ்வாறு? - பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்; வரலாற்றுப் போக்கை மாற்றியமைத்த திராவிடர் இயக்கம் - வழக்கறிஞர் எஸ்.துரைசாமி; வால்கா முதல் கங்கை வரை வரலாற்று ஆவணமா? - பேராசிரியர் கருணாநந்தன்; ஜாதியம் பெண்ணடிமை இந்துத்துவத்தின் ஆணிவேர் மனுசாஸ்திரம்- அதியமான்

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூல் பட்டியல் :** இடஒதுக்கீட்டின் நோக்கம் ஜாதி ஒழிப்பே!; தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமான தலைவரா அம்பேத்கர்?; பெரியார் பேசியது தமிழ்த் தேசியமல்ல, தனித் தமிழ்நாடு; பெரியாரும் தமிழ்த்தேசியமும்; மலேசியா, சிங்கப்பூரில் பெரியாரின் தாக்கம்; வர்ணாஸ்ரமம் உருவாக்கிய ஜாதி; ஜாதி வெறியைத் தூண்டுவது யார்?

**கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூல் பட்டியல் :** அம்பேத்கருக்கு இந்து மதச் சாயம் பூசும் வரலாற்று திரிபுகளுக்கு மறுப்பு ?; ஆட்சி மாற்றமல்ல; அடையாள மீட்புப் போர்!; இராமன் எத்தனை இராமனடி; ஒரு சார்பு சுதந்திர பிரகடனம்; கலைஞரின் ஆட்சி நிர்வாகத் திறன்; கீதையின் வஞ்சகப் பின்னணி; கோயில் உரிமை யாருக்கு?; சமூக நீதிக்கு சாவுமணி அடிக்கும் அய்.அய்.டி; சொர்க்கம் போக ரொக்கம் செல்லாது; தாரை வார்க்கப்பட்ட கச்சத் தீவு; தேவ அசுரப் போராட்டம் முடியவில்லை - தலையங்க தொகுப்பு 4; பகுத்தறிவும் வாழ்வுரிமையும் - தலையங்க தொகுப்பு 2; பாசிசத்தை வீழ்த்த திராவிடத்தைப் பேணுவோம்; பினாயக் சென்னுக்கு எதிரான சூழ்ச்சி வலை; புத்தரின் பார்ப்பனிய எதிர்ப்புப் புரட்சி; பெரியார் : தொடரப்பட வேண்டிய பயணம் - சிற்றுரைகள் தொகுப்பு; பெரியார் கொள்கைத் ‘தூதர்கள்’; பெரியாரியத்தின் வெற்றி - தலையங்க தொகுப்பு 1; யார் தேச விரோதிகள்?; ஜாதியும் ஜாதிப் பேரணியும்- தலையங்க தொகுப்பு 3.

மேலே பட்டியலிட்டுள்ள புத்தகங்கள் தவிர ஏற்கனவே பதிவேற்றிய மின்னூல்களும் பெரியாரின் நூல்கள் ஆங்கிலத்திலும் இந்த இணைப்பில் படிக்கலாம். இன்னும் பல புத்தகங்கள் மின்னூலாக்கி இணைய தளத்தில் இலவசமாக படிக்க பணிகள் நடந்து கொண்டுள்ளன.

**செய்தி – க. விஜயகுமார் (இணையதளப் பிரிவு)**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மெல்லாம் மதமொழிந்த மதமற்ற மனிதர்களாக வாழ வேண்டும் என்பதுதான். சாத்தான்குளம் உரையில், "எல்லா மதமும் ஒழியும் போது இஸ்லாமும் ஒழிந்து போகும். அதுவரை தான் நான் கூறுகிறேன் அந்த மதத்திற்குப் போ’ மதமற்ற சமுதாயத்தை பெரியார் விரும்பினார். ஆனால் மதாற்றத்தை பேசிக்கொண்டே செய்தார்.

ஒரு செயல்பாட்டாளனுக்கும் சிந்தனையாளனுக்கும் வேறுபாடு உண்டு. நான் சென்னைக்கு செல்ல வேண்டும் என்று செல்கிறவன். சென்னைக்கு செல்கிறவனை பார்த்து வேலூரில் ஏன் இருக்கிறாய் ? திருப்பெரும்பதூரில் ஏன் இருக்கிறாய் ? என்று கேட்பது சரியா ? சிந்தனையாளன் சென்னைக்கு செல்ல வேண்டும் என்று சிந்திக்கிறவன். செயல்பாட்டாளன் அதில் பயணிக்கிறவன். முதலில் வேலூர், பிறகு திருப்பெரும்பதூர் அதன் பிறகு தான் சென்னைக்கு செல்ல முடியும். அப்படியாகத் தான் பெரியாரின் மதமாற்றக் கருத்துக்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதை செய்தாவது ஜாதியை ஒழித்து விட வேண்டும் என்று துடித்த தலைவர்கள் எதைச் சொல்லியாவது மக்களை நகர்த்திக் கொண்டே போனார்கள். இலட்சியத்தை சொல்லிவிட்டு அமைதியாக இருந்துவிடவில்லை. இலட்சியத்தை நோக்கி நம்மை நகர்த்திக் கொண்டே போனார்கள். அதில் ஒரு இடத்தை வைத்துக் கொண்டு பேசக்கூடாது. பலர் தற்போதும் மேடையில் ‘பெரியார் இன்றும் தேவைப்படு கிறார்’ என்று பேசுவார்கள். அப்படியென்றால் நாம் இன்னும் மதம், ஜாதி, பெண்ணடிமைத் தனத்தைப் பின்பற்றும் சமூகத்தில் தான் இருக்கிறோம். பெரியார் எதிர்பார்த்தார், ‘100 வருடம் கழித்து வரும் சமூகம் என்னை பிற்போக்குவாதி என்று கூற வேண்டும் என்று. இதையெல்லாம் பிரச்சாரம் செய்ய ஒரு கிழவன்இருந்திருக்கிறான் ’ என்று கேலி பேசும் காலம் வரும் என்று எதிர்பார்த்தார். ஆனால் 100 ஆண்டு ஆகிவிட்டது. இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் அந்த காலம் வருமா என்று தெரியவில்லை. எனவே தேக்கமடைந்து இருக்கிறோம். அதைத் தான் இந்த புத்தகம் உணர்த்துகிறது. நமது தலைவர்கள் என்ன வழியை கூறினார்கள் என்ற கடந்த காலத்தை இந்த புத்தகம் உணர்த்துகிறது. பெரியார் திருக்குறளைப் பற்றி கூறினார், ’ திருக்குறளில் உள்ள அனைத்தும் சரி என்று நான் கூற வரவில்லை, ஒரு கடை இருக்கிறதென்றால் அதில் உனக்குத் தேவையானது உள்ளதே தவிர அனைத்து பொருளும் உனக்கு பயன்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று கூறுவார். அப்படி பெரியாரின் சிந்தனைகளை தொகுத்து அளித்திருக்கிறார்கள். அதை படிப்பதோடு நிறுத்தி விடாமல் அந்த சிந்தனையை நோக்கி நகருவதற்கோ, நகர்த்துவதற்கோ முன் வர வேண்டும் என்ற வேண்டுகோளோடு உரையை முடிக்கிறேன். (நிறைவு)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th February 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN